# எழுத்தாளர் லஷ்மியின் கங்கையும் வந்தாள் புதினத்தில் காணலாகும் தமிழரின் வாழ்வியல் குறித்த சிந்தனைகள்

45

**ப.ஜெயலெட்சுமி**
**உதவிப்பேராசிரியை, தமிழ்த்துறை**
**காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி- 628008.**

**ஆய்வுச் சுருக்கம்**

சங்ககால இலக்கியங்கள் அக்கால மக்களின் பண்பாட்டை உணர்த்தின. தற்பொழுது இலக்கிய உலகில் வலம் வரும் தற்கால இலக்கியங்களான நாவல் சிறுகதை கவிதை போன்ற பல வடிவங்களைத் தாங்கி நின்று தற்கால சமுதாயத்தில் நிலவுகின்ற வாழ்வியல் சிந்தனைகளை உணர்த்துவதில் பெரும் பங்கு ஆற்றி வருகின்றன. அவ்வகையில் எழுத்தாளர் லஷ்மியின் கங்கையும் வந்தாள் புதினத்தில் உள்ள வாழ்வியல் குறித்த சிந்தனைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

கலைச்சொற்கள்

அரிதான- அருமை காணக் கிடைக்காதது

இல்லாள்- மனைவி

கழுவுறு- துடைத்துக் கொண்ட ஆடையை

பேரின்பம்- அதீத மகிழ்ச்சி

அருள்- இறைத்தன்மை

வீடுபேறு- மோட்சம்

**முன்னுரை**

மனித வாழ்க்கை அறம் உடையதாக இருக்க வேண்டும். எப்படியும் வாழ்வது வாழ்க்கை அல்ல. இப்படித் தான் வாழ வேண்டும் என வரையறை செய்து வகுத்துக்கொண்டு வாழ்வதே வாழ்க்கை. அப்படி வாழும் வாழ்க்கை தன்னலம் உடையதாக இருத்தல் கூடாது.

வாழு வாழ விடு என்பது தலைசிறந்த தத்துவம். தன்னலம்; வளரத் தொடங்குமானால் குறுக்கு வழியில் குறுகிய காலத்தில் சுகவாழ்வு பெறுவது எப்படி? என்பது குறித்து பலரும் சிந்தித்து செயல்பட்டால் மறவழியும் அறவழியாய்த் தோன்றும். பொய் மெய்போல் தோன்றும். அப்போது அறநெறி நீங்கி மறநெறியில் செல்லவே நினைப்பர். உலகில் அன்பும் அருளும் நீங்கி தன்னல இருளே சூழும். நாடு காடாகும். மனிதர்கள் விலங்குகளாவர். விலங்குகள் ஆட்சி நாட்டில் நிலவும். அப்பொழுது 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற கனவு மெய்ப்படாது.

ஆக ஒவ்வொருவரும் தானும் நன்கு வாழ வேண்டும் மற்றவரையும் சிறப்பாக வாழ வழிவிட

வேண்டும். அதற்கு நல்லன என உலகால் கருதப்படுபவை எவையெவை என்பதைப் பற்றி ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**வாழ்வியல் நெறிகள்**

வாழ்வியல் நெறி என்பது மனிதன் மனிதனாக வாழ்வதற்கு மனிதனே வகுத்துக் கொண்ட நெறிமுறையாகும். தமிழரின் வாழ்வியல் நெறியாவது அறத்தின் வழியே பொருளீட்டி இன்பமடைந்து அதன் வாயிலாக வீடு பேறடைதலாகும். பக்குவப்படுத்தப்பட்ட நிலத்தில் விதை விதைத்தால் நன்கு விளையும். அது போன்றே மனிதனும் மனதைப் பக்குவப்படுத்தினால் அறத்தின் வழியே செல்வான். ஓவ்வொரு மனிதனும் தான் வாழும் காலத்தில் ஒழுக்க நெறியைப் பின்பற்றி சமூகத்திற்கும் உலகிற்கும் எந்த அளவு தன்னால் உதவ முடியுமோ அந்த அளவு உதவ வேண்டும். அவ்வாறு வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் உலகில் மனிதன் தோன்றியதற்கான அர்த்தம் உண்டாகும் என்பதையே லஷ்மியின் புதினத்தில் "உங்களை நான் எப்பவோ மன்னிச்சுட்டேன்- உங்க பொருளான வைரப்பிள்ளையாரை பத்திரமா எடுத்து வச்சுக்கோங்க.. அடுத்தபடியாக உங்க மகனை உங்ககிட்டே சேர்த்துட்டேன்... அவனை நல்லா வளர்த்து ஆளாக்குங்க...! இது என்ன பேச்சு கங்கா...என் சொத்து சுகம் எல்லாத்துக்கும் நீ பாத்தியதை உடையவ இல்லையா?... என் வாழ்வில் உள்ள எல்லாத்தையும் சமமா பங்கிட்டுக் கொள்ள வந்த என் துணைவி நீ இல்லையா...? இந்த பிள்ளையார் இனி நம்ம சொத்து- ஆனந்தன் நம்ப மகன். அவனை வளர்த்து ஆளாக்கக் கடமைப்பட்ட பெற்றோர் நாம் இருவர் இல்லையா சொல்லு...? (ப.350) என்ற வரிகள் மூலம் எழுத்தாளர் லஷ்மியின் புதினத்தில் மனிதன் தோன்றியதற்கான உண்மை நிலை சுட்டிக்காட்டப்படுவது போல் வள்ளுவம்

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று" (திரு.236)

எனக் கூறுகிறது.

**அறத்தால் வரும் சிறப்பு**

பொருள்இ இன்பம் என்ற இரண்டிற்கும் ஆதாரமாக அமைவது அறம் மட்டும் தான். அவ்வறத்தைத் தான் அனைவரும் அவசியம் மேற்கொள்ள வேண்டும். சான்றாக கடையேழு வள்ளல்களுள் ஒருவன் பேகன். அவன் தன் மனைவியைத் துறந்து வாழ்வதைக் கண்ணுற்ற பரணர் பேகனை நோக்கி பொருள்இ இன்பம் இவற்றிற்கு காரணமான அறத்தை நீ தவற விட்டாயே. மழை காரணமாக தோகை விரித்து ஆடிய மயில் குளிரால் தான் நடுங்குகிறது எனக் கருதிப் போர்வைப் போர்த்திய அருள் உள்ளம் படைத்த நீயா? உன் மனைவிக்கு அருள் செய்யாதிருக்கிறாய் இது மிகவும் கொடுமையானது. நீ அவளுடைய துன்பத்தைப் போக்கி இன்பம் செய்யும் அறநெறியைக் கடைபிடி இதுவே நான் உன்னிடம் வேண்டுவது என்று கூறி அவனை அறவழியில் செலுத்தினார். ஆக 'இல்லறமல்லது நல்லறமன்று' என்ற வாழ்வியல் சிந்தனையையே இச்சங்க இலக்கியச் செய்தி வலியுறுத்துகிறது.

**பொருளே ஆதாரம்**

'ஈதல் இசைபட வாழ்தல்;' என்றார் வள்ளுவப் பெருந்தகை. இவ்வுலக வாழ்க்கையில் பிறருக்குக் கொடுத்து வாழ்வதே பேரின்பத்தைத் தரும். தன்னை நம்பி இருப்பவரை எதிரியிடமிருந்து காத்தல் பெருமிதத்தைத் தரும். இவற்றிற்கெல்லாம் ஆதாரமாக அமைவது பொருளேயாகும். இதனை எண்ணியே மேற்கொள்ளும் வினையே தமக்கு உயிர் என ஆடவர் பொருள் முயற்சியை மேற்கொண்டனர். இதனைத் தலைவி

"அரிதான அறன் எய்தி அருளியோர்க்கு அளித்தலும்
பெரிதாய பகை வென்று பேணாரைத் தெறுதலும்
புரிவு அமர் காதலின் புணர்ச்சியும் தரும் எனப்
பிரிவெண்ணிப் பொருள் வயிற் சென்ற நம் காதலர்"

என வரும் கலித்தொகைப் பாடலின் மூலம் வாழ்வியல் குறித்த சிந்தனையாகப் பொருள் ஈட்டலைப் பற்றி அறிவது போன்று லஷ்மியின் புதினத்திலும்

'சென்னையில் குடியேறிய சில மாதங்களிலேயே கடையைத் தன்னுடையதாக்கிக் கொண்டு அவன் வியாபாரத்தில் மும்முரமாகிப் போனான். வியாபாரம் செய்வதுஇ அதில் பணம் சம்பாதிப்பது எனும் பந்தய உணர்வு அவனைப் பேய் போலப் பற்றிக் கொள்ளவே தாகம்இ பசி உறக்கம் என்று ஒன்றையும் லட்சியம் செய்யாது தன் ரத்தத்திலே ஒன்றி விட்டிருந்த கங்காவையும் மறந்தவனாக அவன் ஓயாது உழைத்தான். வியாபார சூசனை அவனுக்கு சித்தப்பா தந்து விட்டுப் போன சொத்துக்களில் இன்னொன்றாக இருந்தது. சென்னையில் குடியேறிவிட்ட ஒரே ஆண்டு காலத்தில் அவனது வியாபாரம் நான்கு மடங்காக விரிவடைந்து போனது. கட்டிட பொருள்களை விற்பனை செய்வதோடு அல்லாமல் அவன் வீடுகளை வாங்கி விற்கும் எஸ்டேட் ஏஜென்சியில் நுழைந்து விட்டிருந்தான்…' (ப.120) என்ற வரிகள் மூலம் பொருளே இவ்வுலகில் வாழ்வதற்கு ஆதாரமாக விளங்குகிறது என்ற கருத்தை படைப்பாசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**அன்பு வழியில் அகிலம் சிறக்கும்**

வாழ்வின் அடிப்படையாவது அறம் பொருள் இன்பம் எனும் மூன்றே ஆடவர்-பெண்டிரது அன்பு வாழ்வை இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு

அன்போடு புணர்ந்து ஐந்திணை (தொல்-களவு-1)

எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். அறத்தினால் பொருளை ஈட்டி அப்பொருளினால் இன்பம் நுகர்தல் சிறப்பு என்கிறார். வாழ்வின் இன்பத்திற்கு அடிப்படையாக அமைவது அன்பு. அன்பு என்பது ஒருவர் நெஞ்சம் மற்றவர் நெஞ்சோடு ஒன்றிக் கலப்பது. உத்தமமான அன்பிற்கு சேர்ந்து வாழ்தலும் கூடிப் பழகுதலும் முக்கியமானது இக்கருத்தை குறுந்தொகைப் பாடல் வழி

யாயும் ஞாயும் யாராகியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்?

யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே (குறுந்: 40)
எனத் தலைவனும்இ
யாரினும் இனியன் பேரன்பினனே (குறுந்: 85)
எனத் தலைவியும் அன்பின் மிகுதியைப் புலப்படுத்துகின்ற தன்மையை அறிகிறோம்.

மனை வாழ்க்கையில் ஒத்த அன்பு கணவன்-மனைவி இருவருக்கும் இருக்க வேண்டிய பண்பாகும். இந்த 'ஒத்த பண்பு' என்றும் இருந்தால் தான் இல்லறம் சிறக்கும் என்பதை அகநானூற்றில்

… யாக்கைக்கு
உயிர் இயைந்தன்ன நட்பின் உயிர்
சாதல் அன்ன பிரிவு (அகம்.339: 11-14)

எனக் காதல் இலக்கணத்தை புலவர் எடுத்தியம்புகிறார்.

காதல் வாழ்வில் இருவரும் பிரியாது கூடிவாழ்தலையே பெரும்பேறாகக் கருதுவர். 'வறிய வாழ்க்கை வாழ்ந்தாலும் பிரியா வாழ்க்கையே பெருமை தரும் வாழ்க்கை' என்று அறிவுறுத்தப்படுகிறது. இதனையே கங்கையும் வந்தாள் புதினத்தில்

ஐயா! உங்கள் உடல் நிலையைப்பற்றி புரிஞ்சு கொண்டதாலே இந்தக் கல்யாணத்தை நானே எடுத்து செய்கிறதுன்னு முன்னதாகவே முடிவு செய்துட்டேன். அப்படியா நன்றி! கங்காவை எனக்கு கட்டிக் கொடுக்க நீங்க சம்மதிச்சதுக்கு நான் நன்றி சொல்லனும். வேற எதுவும் எனக்குத் தேவையில்லை. வீட்டை விற்று பணத்தை நீங்கள் வங்கியில் போட்டுக் கொண்டு அதன் வட்டியிலே சுகமா இருக்கனும்னு நான் விரும்பறேன்! தம்பி! உனக்கு ரொம்ப நல்ல மனசு…! பேச முடியாது உணர்ச்சி வசத்தில் கண்களில் பொங்கிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டார். எனக்கு ஏதாவது நேர்ந்தா கங்கா அனாதையாகி விடுவான்னு ரொம்ப மனச்சங்கடப்பட்டுக் கொண்டிருந்தேன். இப்போ எனக்கு பெரிய நிம்மதி… என்றவர் கங்கா! என்று மீண்டும் குரல் கொடுத்தார்.என்னப்பா? ரெண்டு பேருக்கு சூடா சாப்பிடக் கொஞ்சம் பாதாம்பால் கலக்கிட்டு வா…!ரெண்டு பேருக்கு மட்டுமா கொண்டு வரச்சொல்றீங்க. கங்காவுக்கு எதுவும் தேவையில்லையா? வேடிக்கையாகக் கேட்டு சிரித்தான் நரேந்திரன். அட அவளை மறக்க முடியுமா. அவதானே இந்த மகிழ்ச்சியின் நாயகி. அவளுக்கும் சேர்த்து…மூனுபேருக்கும் எடுத்து வாம்மா! சிரித்தார் ரத்தினசாமி (பக்.156-157)

**இயைந்து வாழும் இல்லாள்**

பெண்கள் எப்பொழுதும் தன்னுடைய புகுந்த வீட்டிலேயே பெருமையாக போற்றப்படுவர். வீட்டுக்குத் தலைவியாகிய பெண் அன்பு- ஒழுக்கம்- கற்பு- பொறை- விருந்தோம்பல்- சுற்றத்தை உபசரித்தல் எனப் பல குணங்களைப் பெற்றுத் தலைவனுக்குப் பெருமை சேர்க்கிறாள். இதை அகநானூற்றுப் பாடல்

அன்பும் மடனும் சாயலும் இயல்பும்
என்பு நெகிழ்க்கும் கிளவியும் பிறவும்
ஒன்றுபடு கொள்கையொடு (அகம்: 225-1:3)

எனத் தலைவியின் குணத்தைக் கூறுகிறது.

கற்புஇ நாணம் இரண்டும் பெண்களுக்கு பேரணிகலன்கள் என்பதை நற்றிணைப் பாடல்

உயிரினும் சிறந்த நாணும் நனிமறந்து
உரைத்தல் உய்ந்தனனே (நற்: 17: 8-9)

தன் கணவனுக்குச் சமைத்துப் பரிமாறி அவன் விருப்புடன் உண்பதைக் கண்டு மனைவி பெரும் மகிழ்ச்சி அடைவதை குறுந்தொகைப் பாடலில்

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ
தான் துழந்து அட்ட தீப்புளிப் பாகர்
இனிது என கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே
(குறு: 167: 1-6)

எனச் சித்தரிக்கிறது. இப்பாடல் ஒரு பெண்ணின் இல்வாழ்க்கைச் சிறப்பை எடுத்தியம்புவதோடு கணவனுடைய இல்லத்தில் வறுமை இருந்தாலும் அவனோடு இயைந்து அவனுக்குத் தொண்டு செய்து வாழ்வதையே பெண்கள் தங்களின் கடமையாகக் கொண்டுள்ளனர் என்பதைப் போன்று லஷ்மியின் புதினத்திலும் இந்த இளம் வயசில் சரியான துணையின்றி தனித்து இருந்தால் பல ஆபத்துக்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கு. ஒரு ஆண் கோவிச்சுக்கிட்டு வீட்டை விட்டு வெளியே போய்விட முடியும். பாதை ஓரத்தில் கூட அவனால் படுத்து உறங்க முடியும். ஆனால் பெண் நான்கு சுவர்கள் கொண்ட வீடு எனும் பாதுகாப்பிலிருந்து வெளி நடப்பு செய்ய முடியாது. பெண்கள் புரட்சி எது- தவறு எதுன்னு புரிஞ்சுக்கிட்டு நடக்கணும்மா…சிவகாமி படபடவென்று பேசினாள்.

கங்கா! என்னை மன்னிச்சுடு. என் மனைவியாக என்னோடு இணைந்து வாழ ஆசைப்படாவிட்டால் ஆனந்தனுக்கு அன்பான ஒரு தாயாக இரு. நாம ரெண்டு பேரும் அவனை வளர்த்து ஆளாக்குவோம் என கெஞ்சியபடி அவளது கரங்களை இறுக்கமாகப் பற்றிக் கொண்டான். நெஞ்சை அடைத்துப் பொங்கிப் புரண்ட உணர்ச்சிக் கொந்தளிப்பைத் தாங்க முடியாது கங்கா நரேந்திரன் தோள் மீது சாய்ந்து கொண்டாள்…

(பக்: 362-363)

என்ற வரிகள் மூலம் பெண் அன்பு -ஒழுக்கம் கற்பு-பொறை போன்ற குணங்களைப் பெற்றுத் திகழ வேண்டுமென படைப்பாசிரியர் சுட்டிக் காட்டுவது புலனாகிறது.

**உழவும் முயற்சியும் திருவினையாக்கும்**

வாழ்வில் உழவையும் தொழிலையும் பெருக்கினால் இல்லாமையை ஒழிக்கலாம். ஒரு சமூகத்தில் வறுமை நிலவக் காரணம் தனிமனிதக் குறைபாடும் சமூதாய அமைப்பிலுள்ள குறைபாடும் ஒரு தனி மனிதன் தன் முயற்சியாலும உழைப்பாலும் ஊக்கத்தாலும் தன் வறுமையைக் களையலாம். இதனை வள்ளுவர் தன் குறளில்

முயற்சி திருவினை ஆக்கும் முயற்சியின்மை
இன்மை புகுத்தி விடும் (குறள்:616) என்றும்
இலம் என்று அசை இருப்பாரைக் காணின்
நிலம் என்னும் நல்லாள் நாகும் (குறள்:1040)

என்னும் குறள் உழவுத் தொழிலே உலகின் பொருளாதாரத்திற்கு அடிப்படையானது என்ற கருத்தை விளக்குகிறது. இதனைப் போன்று கங்கையும் வந்தாள் புதினத்தில்

விடியுமுன்பே வேலையை ஆரம்பிச்சுட்டீங்களே? வியப்புடன் கேட்டான். இந்த நிலமும் வீடும் தான் என் சொத்து. இதில் விளையுறதை டவுண் கடையிலே போட்டு வரதைக் கொண்டு நாங்க வாழ்க்கையை நடத்திக்கிட்டு போறோம். உழைச்சாத்தானே நிம்மதியா உட்கார்ந்து ஒரு பிடி சாப்பிட முடியும் என்றார். (பக்:113-114)

என்ற வரிகள் உழைப்பின் அவசியத்தை உணர்த்துகின்றது.

**பகுத்துண்ணல்**

'செல்வத்துப் பயனே ஈதல்' என்பது வள்ளுவரின் நோக்கமாகும். சமுதாய அமைப்பிலுள்ள குறைபாட்டிற்கு வள்ளுவர் கண்ட தீர்வு பகுத்துண்ணல். பகுத்துண்ணலாகிய ஈதலின் தேவையை வள்ளுவர்

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை (குறள்:322)

என்று அழுத்தமாகவே கூறுகிறார்.

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்

மனித சமுதாயத்திலே மனிதர்களைப் பார்க்கிறோம். ஆனால் மனிதனைப் பார்க்கிறோமா? மனிதர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் அவர்களிலே மனிதன் என்று அளக்கக் கூடிய பண்புள்ள மனிதர் எத்தனை பேர்? என்பதை சித்தர் பாடலில்

மனிதரிலே மரமுண்டு விலங்குண்டு பறவையுண்டு
மனிதரிலே மனிதருண்டு வானவரும் மனிதராய் வருவதுண்டு

ஆக மனிதன் மனிதனாக வாழ்வது என்பது அத்தனை அரிதான செயலாகிவிட்டது. மோன நிலையை ஒருவர் எப்படி அடைந்தாலும் அடிப்படையாக வேண்டுவது ஒழுக்கமே. ஏனெனில் மன ஆற்றலுக்கு

ஒழுக்கமே தேவை. அதனால் தான் உயிரைக் காட்டிலும் ஒழுக்கமே சிறந்தது எனத் தமிழரால் போற்றப்படுகிறது. இதனையே லக்ஷ்மியின் புதினத்திலும்

பேச நமக்குள் இனி எதுவுமே கிடையாது. தயவு செய்து வழியில் நின்று வம்பு செய்யாதீங்க. உங்களை விட்டு ஒதுங்கினபோதும் நான் மானம் மரியாதையோட வாழ்ந்துகிட்டிருக்கேன். இந்த பக்கத்து மனிதர்கள் என் மேலே ரொம்ப மதிப்பு வச்சிருக்காங்க. ஒரு படகு கார்க்காரனிடம் நான் நின்று பேசுவதை யாராவது பார்த்தா…தப்பா நினைப்பாங்க. ஏன்னா இந்த ஏழைப் பொண்ணுக்கு இப்படி ஒரு பணக்காரக் கணவன் இருப்பார்னு அவங்களால் நம்ப முடியாது! (ப.273)

என்ற வரிகள் ஒழுக்கமானது உயிரை விடப் பெரிதாகப் போற்றப்பட வேண்டுமென சுட்டிக்காட்டுகிறது.

**முடிவுரை**

இன்று நம்மை அச்சுறுத்தும் முக்கியப் பிரச்சனைகளுக்கு மூல காரணங்களாக உள்ளவை சுயநலம் மிக்க போட்டிகளும் பொறாமைகளும் நிறைந்த சர்வாதிகாரம் கொண்ட ஆதிக்கப் பண்புகளும் இயந்திரங்களும் ஆயுதங்களுமேயாகும். எவ்வளவு தான் விஞ்ஞான தொழில் நுட்ப பொருளாதார வளர்ச்சிகளை நாம் கண்டாலும் புரிதலோடு தம்மையும் தம் வாழ்விடத்தையும் சூழலையும் பாதுகாத்து வாழத் தெரியாதவிடத்து மனித குலத்துக்கு அமைதியான எதிர்காலம் இருக்காது. எனவே அமைதியான எரிர்காலத்தைத் தருவன ஆழமான கருத்துகளைக் கொண்ட அழியாத தன்மை கொண்ட இலக்கண இலக்கியங்களே என்பதை அறிந்து செயல்படுவோம்.

**துணைநூற்பட்டியல்**

1. லஷ்மி - கங்கையும் வந்தாள் பூங்கொடி பதிப்பகம் சென்னை-4
2. டாக்டர்.மு.வரதராசனார் -திருக்குறள் தெளிவுரை சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.
3. நச்சினார்க்கினியர் உரை-தொல்காப்பியம் பொருளதிகாரம்(தொகுதி-2) அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
4. ந.மு.வேங்கடசாமி நாட்டார்- அகநானூறு மூலமும் உரையும் சாரதா பதிப்பகம்.
5. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை- நற்றிணை மூலமும் உரையும் சாரதா பதிப்பகம்.
6. புலியூர்க்கேசிகன்- குறுந்தொகை மூலமும் உரையும் சாரதா பதிப்பகம்.